# அக்டோபர்



# 10. தலைவனின் பாதை

## முன்னுரை

அக்டோபர் மாதம் என்பது, நம் திரு அவையிலும் சரி, நம் தாய்த்திருநாட்டிலும் சரி, பல மாபெரும் மனிதர்களை நினைவு கூறுகிற மாதம். அக்டோபர் இரண்டாம் தேதி, நம் தேசப்பிதா மகாத்மா காந்தி, நம் தேசத்தின் இரண்டாவது பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி ஆகியோரின் பிறந்த நாளாகவும், கர்ம வீரர் காமராசரின் நினைவு நாளாகவும் அமைகிறது. எல்லா மாதங்களின் எல்லா நாட்களுமே புனிதர்கள் நினைவாக இருந்தாலும், அக்டோபர் மாதத்தில் குழந்தை தெரசா, பிரான்சிஸ் அசிசியார், மரியபவுஸ்டினா, பிரான்சிஸ் போர்ஜியா, அவிலா தெரசா, அந்தியோக்கு இஞ் ஞாசியார், நற்செய்தியாளர் லூக்கா, சிலுவை சின்னப்பர், மரிய கிளாரட்,ஜெரார்ட் மஜெல்லா, எனப் பல பெரும் புனிதர்களை நினைவு கூர்ந்து கொண்டாடுகிறோம். நாட்டின் பெருந்தலைவர்களும், திருஅவையின் பெரும் புனிதர்களும் கொண்டாடப்படுகிற இந்த மாதம் தலைமைத்துவத்தின் மாண்பினை நமக்கு நினைவூட்டுகிறது. இவர்கள் அனைவரையும் விஞ்சுகிறவரும், இவர்களுக்கெல்லாம் முன்மாதிரியாகவும் இருக்கக்கூடிய இயேசுவை மீட்பராகவும் நல்லாயனாகவும், குணமளிப்பவராகவும், தியாகச் செம்மலாகவும் பார்த்துப் பழகியிருக்கிறோம். ஆனால் அவர் ஒரு நிகரற்ற தலைவரும் கூட. அந்தத் தலைவரின் பாதை, பாடுகள் நிறைந்ததாய் இருந்தாலும் அதுவே சிகரத்தை நோக்கிய சீர்மிகு பயணம் என்பதை யாராலும் மறுக்க முடியாது. வாருங்கள் அந்தத் தலைவனின் பாதையில் பயணித்து, தலைமைத்துவத்தின் தத்துவங்களைக் கற்றுக் கொள்வோம்.

◆

# தட்டிக் கழிக்காத தலைமை

‘காலம் கெட்டுவிட்டது, சமூகம் சீரழிந்துவிட்டது, மானுடம் பாழாய்ப்போனது’ என வாய்கிழியப் பேசும் நம்மில் எத்தனைபேர் ‘நான் ஏதாவது செய்வேன், பெரியதாகவோ, சிறியதாகவோ, நான் ஒரு மாற்றத்தைக் கொணர்வேன்’ என சபதம் ஏற்கத் தயாராக உள்ளோம்? அப்படி உறுதியேற்று உழைத்தவர்கள்தான் இன்றைக்குத் தலைவர்களாக விளங்குகிறார்கள்.

சிலுவைப்பாதையின் முதல் தலத்தில் தலைமைப் பொறுப்பில் இருந்த பிலாத்துவையும் பார்க்கிறோம். கைதியாய் இழுத்து வரப்படும் இயேசுவையும் பார்க்கிறோம். ஆனால் யாரிடம் தலைமைப் பண்பு உயர்ந்தோங்கியது பாருங்கள்.

நீதி இருக்கையில் அமர்ந்திருந்த பிலாத்து தன் பொறுப்பைத் தட்டிக்கழிக்கப் பார்க்கிறான். கைகளைக் கழுவுகிறான். கூட்டத்துக்கு அஞ்சி, தன் மனசாட்சிக்கு எதிரான அநியாயத் தீர்ப்பை வழங்குகிறான்.

ஆனால் இயேசுவோ, தம்மீது சுமத்தப்படுகிற பழியும், தண்டனையும் அநீதியானது எனத் தெரிந்தும், துணிவுடன் அதனை ஏற்கிறார். காரணம் தான் அந்தத் தண்டனையை ஏற்காவிட்டால் மானிட மீட்பு சாத்தியமாகாது என்று அவர் உணர்ந்திருந்தார். தட்டிக் கழிப்பவன் தலைவன் அல்ல; துணிவுடன் ஏற்பவரே தலைவர்.

**அருள்வாக்கு: “அவர் அவற்றிற்கு முன் செல்வார்; ஆடுகளும் அவரைப் பின்தொடரும்” (யோவா. 10:4)**

## செபம்

ஆடுகளுக்கு முன்செல்லும் நல்லாயனே, உம்மைப்போல் தட்டிக் கழிக்காதத் தலைமைப் பண்புடன் விளங்க எங்களுக்கு அருள்தாரும்.

# தன் தோள்மேல் ஏற்கும் தலைமை

"யாராவது இதைச் செய்தால் நன்றாக இருக்குமே! யாராவது இதைக் கேட்டால் நியாயம் கிடைக்குமே! இந்த அநியாயத்தைக் கேட்க யாருமே இல்லையா? என்றெல்லாம் வருத்தப்படும் நம்மில் எத்தனைபேர் "நான் இதைக் கேட்கிறேன், நான் இதைச் செய்கிறேன்; வாருங்கள், நாம் இதைச் செய்வோம்" என நல்ல காரியங்களை முன்னெடுத்திருக்கிறோம்? அப்படி முன்னெடுத்தவர்கள்தான் தலைவர்கள் ஆகியுள்ளனர்.

இந்த உலகம் உருவாக்கப்பட்டு, முதல் மனிதன் செய்த தவறு தொட்டு, இன்றுவரை பிறர்மீது பழி போடுவதே மனித இயல்பாகிவிட்டது. நாம் செய்ய வேண்டியவற்றைச் செய்யவும், பொதுக் காரியம் ஒன்றை முன்னெடுத்துச் செய்யவும் தயக்கம் இருந்தே வருகிறது. "அது அவர்களது வேலை; அதை ஏன் நான் செய்ய வேண்டும்?" என்கிற கேள்விதான் பல நல்ல காரியங்கள் நடவாமல் இருப்பதற்குக் காரணம்.

ஆனால், இயேசு அந்தக் கேள்வியைக் கேட்கவே இல்லை. நாம் எல்லோரும் சுமக்க வேண்டிய சிலுவைகளும், மானுட குலத்தின் பாவத்திற்கான மொத்தத் தண்டனையும் பாரச் சிலுவையாக அவர் மீது சுமத்தப்படுகிறது. ஒரு நல்ல தலைவனுக்கே உண்டான அழகோடு, அவரும் அதனைத் தன் தோள் மீது ஏற்றுக் கொள்கிறார். முகம் சுழிக்காமல் சுமக்க முன் வருகிறார். காத்திருப்பவன் தலைவன் அல்ல; களம் காண்பவனே தலைவன்.

**அருள்வாக்கு: "எல்லோரும் என்னிடம் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத். 11:28)**

## செபம்

சோர்ந்திருப்போரை அழைக்கும் கனிவுமிக்கவரே, உம்மைப்போல் பொறுப்பேற்று களம் காணும் தலைமைப் பண்பை எங்களுக்குத் தாரும்.

# தாழ்ந்திடத் துணிந்த தலைமை

“யாராவது இறங்கி சுத்தம் செய்தால் கால்வாய் சீராகிவிடும்; யாராவது இறங்கி வண்டியைத்தள்ளினால் ஓட ஆரம்பித்துவிடும்; யாராவது இறங்கிப் போராடினால் இழந்த உரிமையைப் பெற்று விடுவோம்” எனச் சொல்லுவதையே வாடிக்கையாகக் கொண்டுள்ள நம்மில் எத்தனை பேர் அந்த யாராவதாக இருக்க நினைக்கிறோம்? அப்படி நினைத்தவர்கள்தான் தலைவர்களாக உயர்ந்துள்ளனர்.

“நான் எப்படி இந்த வேலையைச் செய்வது?” என்பது நம்மில் பலர் எழுப்பும் கேள்வி. செய்யும் தொழிலை வைத்து வர்ணம் பிரிக்கும் சமூகப் பின்னணியில் வளர்ந்தவர்கள் அல்லவா நாம்? “பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” எனச் சொன்னவரைப் போற்றத் தெரிந்த அளவிற்கு, அவரது கருத்துக்களைப் போற்றத்தெரிவதில்லை நம்மில் பலருக்கு. இந்த வேலையை இவர்தான் செய்ய வேண்டும் என்றோ, இது உயர்ந்த வேலை, இது தாழ்ந்த வேலை என்றோ ஒன்றுமில்லை என்பதை எப்போது உணரப் போகிறோம்?

இயேசு கடவுளாய் இருந்த போதிலும் மனிதராய் இறங்கி வந்தார். சிலுவைப் பாதையின்போது மண்ணைக்கூட முத்தமிட்டார். முட்டிகளைப் புழுதியாக்கினார்; தமது ஆடைகளில் கறைபடிய அனுமதித்தார்; கரங்களைக் காயப்படுத்தினார். தம்மீது எந்த சிராய்ப்பும் ஏற்படாமல் உலகின் காயங்களை ஆற்றுவது இயலாத காரியம் என்பதை இயேசு அறிந்தே இருந்தார். அவர் தாழ்ந்திராவிட்டால் நாம் மீண்டிருக்க முடியாது. கவுரவம் பார்ப்பவன் தலைவன் அல்ல; களத்தில் இறங்குபவனே தலைவன்.

**அருள்வாக்கு: “விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த உணவு நானே” (யோவா. 6:41)**

**செபம்**

எம்மை வாழ்விக்க உணவாய் இறங்கி வந்தவரே, உம்மைப் போல் தாழ்ந்து பணியாற்றும் தலைமைப் பண்பை எங்களுக்குத் தாரும்.

◆

✦ **நான்காம் நிலை**

## உறவுகளைக் கடந்து சிந்திக்கும் தலைமை

“என் மகன் ஜெயிக்க வேண்டும், என் மகள் வெல்ல வேண்டும், என் மனைவிக்குப் பதவி வேண்டும், என் கணவருக்கு பதவி உயர்வு வேண்டும்” என்று நினைப்பதுதான் நம் எல்லோருடைய இயல்பும். ஆனால் ‘சிறந்தவர்கள் ஜெயிக்கட்டும், சிறந்தவர்கள் முன்னுக்கு வரட்டும்’ என நினைத்து உழைப்பவர்கள் தான் தலைவர்கள்.

எனக்கென்று ஒரு குடும்பம் உள்ளது. என் மனைவி, என் கணவர், என் மக்கள் - இவர்களது பாதுகாப்பு எனக்கு முக்கியமில்லையா?” என்று சொல்லி ஒதுங்குபவர்களும், எந்தவித பொதுக் காரியங்களிலும் ஈடுபடாதவர்களும்தான் அதிகம். ஆனால், உறவுகளையும் தாண்டி, பொதுநலத்தோடு உழைப்பவர்கள்தான் ‘தலைவர்கள்’ என அழைக்கப்படத்தகுதி படைத்தவர்கள்.

இயேசுவின் சிலுவைப் பாதையின்போது அவருக்கு இருந்த ஒரே உறவான தாய்மரியாவை சந்திக்கிறார். பிறருக்காக தன் மகன் படும் பாடுகளைப் பார்த்து மரியாவின் உள்ளம் ஊடுருவத்தான் பட்டது. ஆனால் தாய் மரியாவும் சரி, இயேசுவும் சரி, தங்கள் உறவு வட்டத்தைப் பெரிதாக்கத் தெரிந்தவர்கள். பிறரது தேவைகளைக் கண்டு அவற்றை நிவர்த்தி செய்யும் அன்னையைக் கானாவூரில் பார்த்தோம். இப்போது உலக மீட்புக்காகத் தம் மகனையே தாரை வார்க்கும் அன்னையாக அவரைப் பார்க்கிறோம். தன் வீடு,

தன் பெண்டு, தன் மக்கள் என்றிருப்பவன் தலைவன் அல்ல; பிறரையும் பந்தமெனக் கருதி பணியாற்றுபவனே தலைவன்.

**அருள்வாக்கு: “விண்ணகத்திலுள்ள என் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என் சகோதரரும் சகோதரியும், தாயும் ஆவார்” (மத். 12:50)**

## செபம்

என் தாயும் சகோதரர்களும் இவர்களே என சீடர்களைக் குடும்பமாய்க் கருதிய இயேசுவே! உறவுகளைக் கடந்து சிந்திக்கும் தலைமைப் பண்பை எங்களுக்குத் தாரும்.

◆

✦ **ஐந்தாம் நிலை**

# அரவணைத்துச் செல்லும் தலைமை

“நான் என்ன செய்கிறேன் என்பது எனக்குத் தெரியும். அனாவசியமாக மூக்கை நுழைக்காதீர்கள். தேவையில்லாமல் தொந்தரவு செய்யாதீர்கள். ஆலோசனை, ஒத்தாசை என்கிற பெயரில் உபத்திரவம் செய்யாதீர்கள்” எனச் சொல்லி மற்றவர்களைத் தவிர்த்துவிட்டு, செயல்களைச் செய்வதே நமக்கு சுலபமாகத் தெரிகிறது. மற்றவர்களுக்கு உதவ வேண்டும், மற்றவர்களின் உதவியையும் பெற வேண்டும் என்கிற எண்ணம் நம்மில் பல பேருக்கு எழுவதேயில்லை.

‘கூடி வாழ்ந்தால் கோடி நன்மை’ ‘தனிமரம் தோப்பாகாது’ என்பதெல்லாம் நமக்குத் தெரியாமல் இல்லை. ஆனால் எங்கே பிரச்சனைகள் வந்துவிடுமோ என்று பயந்தே கூட்டு முயற்சியைத் தவிர்த்து விடுகிறோம். மற்றவர்களை அனுசரித்துச் செல்லவும், அரவணைத்துச் செல்லவும் நமக்கு மிகவும் சிரமமாகவே உள்ளது. ஆனால் அப்படி அரவணைத்துச் செல்பவர்கள் தான் சிறந்த தலைவர்கள்.

“நான் கடவுளின் மகன். எனக்கு அற்ப மனிதன் ஒருவன் உதவுவதா?” என இயேசு நினைத்திருக்கலாம். ஆனால்

அவர் சீமோனின் உதவியை மனதார ஏற்றுக் கொள்கிறார். முடிந்த போதெல்லாம் மற்றவர்களுக்கு அருஞ்செயல் புரிந்து உதவுவதையே வாழ்வாகக் கொண்டிருந்த இயேசு, முடியாதபோது சீமோனின் உதவியை முகம் கோணாமல் ஏற்றுக் கொள்கிறார். அனைத்தும் யாமறிவோம் என்று சொல்பவன் தலைவன் அல்ல. அனைவரையும் அரவணைத்துச் செல்பவனே தலைவன்.

**அருள்வாக்கு: "நான் செய்யும் செயல்களை என்னிடம் நம்பிக்கை கொள்பவரும் செய்வர், ஏன், அவற்றைவிடப் பெரியவற்றையும் செய்வார்." (யோவா. 14:12)**

## செபம்

உம் சீடர்களால் உம்மைவிடப் பெரியவற்றைக் கூடச் செய்ய இயலும் என நம்பி ஊக்கமூட்டிய இயேசுவே, உம்மைப்போலப் பிறரை அரவணைத்துச் செல்லும் தலைமைப் பண்பை எங்களுக்குத் தாரும்.

◆

## ✦ ஆறாம் நிலை

# பாராட்டத் தெரிந்த தலைமை

"கொழம்புல உப்பே இல்ல" என மனைவியைக் குறை சொல்லத்தொடங்குவது முதல் "எந்த வேலையையும் ஒழுங்கா செய்றது இல்ல; அவன் எப்பவுமே இப்படித்தான்" என அடுத்தவரை மட்டம் தட்டும் வரை, எல்லாவற்றிலும் குறை கண்டுபிடித்து, எல்லாரையும் குறை சொல்லியே பழக்கப்பட்டுவிட்ட நமக்கு, பிறரைப் பாராட்ட மனம் வருவதேயில்லை. ஆனால் அப்படிப் பாராட்டத் தெரிந்தவர்கள் தான் நல்ல தலைவர்கள்.

"மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும்" எனப் பகர்ந்த பேரறிஞர்களின் கூற்றில் உள்ள உண்மையை நாம் ஏன் உணருவதில்லை. எல்லாம் நன்றாக நகரும்போது ஒரு வார்த்தைகூடச் சொல்லிப் பாராட்டாமல், ஏதாவது தவறு

நடந்தவுடன் மட்டும் திட்டித் தீர்ப்பது தலைமைப் பண்பு அல்லவே அல்ல.

அத்தி மரத்துக்கு அடியில் நின்ற நத்தானியேலைக் கபடற்றவன் என பாராட்டத் தெரிந்த இயேசுவுக்கு, சீமோன் பேதுருவின் விசுவாசக் கூற்றைப் பாராட்டத்தெரிந்த இயேசுவுக்கு, பிற இனத்தாரின் நம்பிக்கையைக்கூட மெச்சத் தெரிந்த இயேசுவுக்கு, சிலுவைப் பாதையின் போது பாராட்ட ஒரே ஒரு வாய்ப்புக் கிடைத்தது. அதை உடனடியாகப் பயன்படுத்திக் கொள்கிறார்.

கறைபடிந்தத் தம் திருமுகத்தைக்கண்டும் காணாமல் சென்ற அத்தனைப் பேரைப் பற்றியும் குறைகூறாமல், தம்மை நெருங்கி வந்து, தமது துகிலால் வருடிக் கொடுத்த வீரப்பெண் வெரோனிக்காவை மனதாரப் பாராட்டுகிறார்; சொல்லால் அல்ல, செயலால். அவரது துகிலில் தம் திருமுகத்தைப் பதித்துத் தம் நன்றியைத் தெரிவிக்கிறார் இயேசு. பாராட்டத் தெரிந்தவனே தலைவன்; பாரா முகமாய் இருப்பவன் அல்ல.

**அருள்வாக்கு: மனிதராய் பிறந்தவருள் திருமுழுக்கு யோவானைவிடப் பெரியவர் எவரும் தோன்றியதில்லை.**
**(மத். 11:11)**

## செபம்

திருமுழுக்கு யோவான் தொடங்கி வீர நங்கை வெரோனிக்கா வரை அனைவரையும் பாராட்டிய இயேசுவே, உம்மைப் போலப் பிறரை பாராட்டுகிற தலைமைப் பண்பை எங்களுக்குத் தாரும்.

◆

✦ ஏழாம் நிலை

# பணிவிடை புரியும் தலைமை

“எனக்குக் கீழே பணிபுரிகிறவன் எனக்கு வணக்கம் சொல்லாமல் போகிறான்; இருக்கட்டும், கவனித்துக்

கொள்கிறேன்'' எனக் கடினமாக்குகிறோம் நம் மனதை. "நான் போய் அவனைச் சந்திப்பதா? நான் போய் அவனிடம் மன்னிப்புக் கேட்பதா? என் அந்தஸ்து என்ன? அவன் அந்தஸ்து என்ன?'' என்றெல்லாம் பேசுவதும் செயல்படுவதும்தான் சரியென நினைத்துக் கொள்கிறோம். ஆனால் தலைமைப் பதவி என்பதே சேவகம் செய்வதற்குத் தான்.

சிலுவைப் பாதையின் போது கீழே விழுந்த இயேசு அதற்கு முந்தைய இரவு கூட விழுந்தார். பந்தியை விட்டு எழுந்து பணியாளன் போல, இடையில் துண்டைக் கட்டிக்கொண்டு, விழுந்து விழுந்து தம் சீடர்களின் பாதங்களைக் கழுவினார்.

"நீங்கள் என்னைப் 'போதகர்' என்றும் 'ஆண்டவர்' என்றும் அழைக்கிறீர்கள்.. நான் போதகர்தான், ஆண்டவர்தான். ஆகவே, ஆண்டவரும் போதகருமான நான் உங்கள் காலடிகளைக் கழுவினேன் என்றால் நீங்களும் ஒருவர் மற்றவர்களுடைய காலடிகளைக் கழுவக் கடமைப்பட்டிருக்கிறீர்கள்'' (யோவா. 13: 13, 14) இதுவே தலைவராம் இயேசுவின் முன்னுதாரணமும் போதனையும்.

சிலுவைப் பாதையின்போது இயேசு இரண்டாம் முறை விழுந்ததைத் தியானிக்கும் நாம், கடவுள் நிலையில் இருந்த அவர் பல நிலைகளில் தம்மைத் தாழ்த்திக் கொண்டதை மறந்து விடுகிறோம். பணிவிடைபெறுபவன் அல்ல; பணிவிடை புரிபவனே தலைவன்.

**அருள்வாக்கு: "உங்களுள் பெரியவராக இருக்க விரும்புகிறவர் உங்கள் தொண்டராய் இருக்கட்டும்''**

**(மத். 20:26)**

## செபம்

உம் பணிதலினால் எங்களுக்கு பாடம் புகட்டும் இயேசுவே, உம்மைப்போல் பணிவுடன் வாழ்ந்து, பணிவிடை புரியும் தலைமைப் பண்பை எங்களுக்குத் தாரும்.

◆

# உண்மையைப் பேசும் தலைமை

“நேருக்கு நேராய் எப்படிச் சொல்வது? இதைச் சொன்னால் என்ன நினைப்பார்களோ? உண்மையைச் சொல்லி கெட்ட பெயர் வாங்குவானேன்?” என்றெல்லாம் ஒதுங்கும் நாம் அனுமதி காத்தால் பரவாயில்லை. ஆனால் புரணி பேசுகிறோம். நம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் புரணி பேசுவதை உள்ளிருந்து கொல்லும் புற்றுநோய்க்கு ஒப்பிடுகிறார்.

நல்ல தலைவர்கள், சொல்ல வேண்டியவற்றை, சொல்ல வேண்டியவர்களிடமும், சொல்ல வேண்டிய நேரத்தில், சொல்ல வேண்டிய விதத்தில் சொல்லத் தயங்குவதேயில்லை. அதைத்தான் இந்தத் தலத்தில் இயேசு செய்கிறார். தம்மீது பரிதாபப்பட்டு, தமக்காக அழுத எருசலேம் மகளிரை நோக்கி, “எனக்காக அழ வேண்டாம்; உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்” என்று நேரடியாகவே சொல்கிறார்.

நேரடியாகப் பேசினால் மனம் கோணி விடுவார்களோ? அவர்களுக்கும் நமக்கும் இடையே உள்ள உறவில் உரசல் ஏற்பட்டுவிடுமோ? என்றெல்லாம் தயங்கும் நம்மைப்போல் இல்லாமல், தமக்கு ஆறுதல் சொல்லவந்தவர்களுக்கே ஆறுதல் கூறுவது போல அறிவுரை கூறுகிறார். உண்மையை உரக்கச் சொல்லுகிறவனே தலைவன்; ஊரெல்லாம் புரணி பேசுகிறவன் அல்ல.

**அருள்வாக்கு: “நீங்கள் பேசும் போது ‘ஆம்’ என்றால் ‘ஆம்’ எனவும் ‘இல்லை’ என்றால் ‘இல்லை’ எனவும் சொல்லுங்கள்.” (மத். 5:37)**

## செபம்

‘உண்மையை எடுத்துரைப்பதே என் பணி’ என்றுரைத்த இயேசுவே, உம்மைப்போல் உண்மையை உரக்கப் பேசும் தலைமைப் பண்பை எங்களுக்குத் தாரும்.

# அயராது உழைக்கும் தலைமை

“இதுக்கு மேல முயற்சி செய்றது வீண். நேரவிரயம் தான் ஆகுமே தவிர உருப்படியாய் எதுவும் நடக்காது. வீணாக உழைத்ததெல்லாம் போதும், வேறு காரியத்தில் ஈடுபடலாம்” எனச் சோர்ந்து போகிறவர்களும், அரைக்கிணறு தாண்டுபவர்களுமே நம்மில் அதிகம். கர்மமே கண்ணாயிருந்து, எடுத்தகாரியத்தை நிறைவேற்றாமல் விடுவதில்லை என எண்ணித் துணிபவர்களும், எண்ணிய எண்ணியாங்கு செய்து முடிப்பவருமே தலைவர்கள்.

தமது சிலுவைப் பாதையின்போது, இயேசு மூன்றாம் முறை விழுந்ததைத் தியானிக்கின்றோம். ஆனால் விழுந்த மூன்று முறையும் எழுந்ததோடு, உடல் சோர்ந்தாலும் மனம் சோராது, இடைவிடாமல் முயற்சித்துக் கல்வாரிக் கொடுமுடியை அடைந்து தம் உயிரைத் தியாகம் செய்து, தமது மீட்புப்பணியை நிறைவு செய்தார் இயேசு.

சின்னச் சின்ன இடைஞ்சல் வந்ததுமே துணிவை இழப்பதும், சிறிய சிறிய தோல்விகளைக் கண்டதுமே முயற்சியைக் கைவிடுவதும் வாடிக்கையாகப் போய்விட்ட நமக்கு இயேசுவின் தொடர் முயற்சியும், சோர்வடையா எழுச்சியும் சிறந்த பாடமும் முன்னுதாரணமுமாய் அமைகின்றன. அயராது உழைப்பவனே தலைவன், அலறி ஓடுபவன் அல்ல.

**அருள்வாக்கு: “இறுதி வரை மன உறுதியுடன் இருப்பவரே மீட்புப் பெறுவர்” (மத். 24:13)**

## செபம்

‘இன்னும் செயலாற்றுகிற’ தந்தையைப் போலவும் உம்மைப் போலவும், அயராது உழைக்கிற தலைமைப் பண்பை எங்களுக்குத்தாரும்.

◆

# நிந்தைக்கு அஞ்சாதத் தலைமை

“தோற்றுப் போனால் என்ன செய்வது? மற்றவர்கள் முன் அசிங்கப்பட்டுவிடக் கூடாது, அவமானப்பட்டுவிடக் கூடாது” என நாம் எல்லோரும் நினைப்பது இயற்கையே. ஆனால், அவமானப்பட்டு விடுவோமோ என்கிற பயத்திலேயே எதையும் செய்யாமல் சும்மா இருப்பது தலைமைப் பண்பு அல்ல. தோற்பவனுக்கு மற்றொரு வாய்ப்பு உண்டு; முயலாதவனுக்கு முதல் வாய்ப்பே இல்லை என்பதைப் புரிந்துகொண்டு, ‘தோற்றாலும் பரவாயில்லை’ எனத் துணிவோடு முயல்பவர்கள் தான் வெற்றியடையும் தலைவர்கள்.

இயேசு ஆடையிழந்து, அவமானப்பட்டு நிற்கும் தலம் இது. தமது ஆடைகளைக் களைய முற்படுகிறார்கள் என்று தெரிந்தும் இயேசு பின் வாங்கவில்லை. தாம் எல்லோருக்கும் முன்னால் அசிங்கப்படப் போகிறோம், அவமானப்படப் போகிறோம் என்று தெரிந்தபோதும்கூட, இயேசு தாம் கொண்டிருந்த இலட்சியத்திலிருந்தும், மேற்கொண்டிருந்த பணியிலிருந்தும் தப்பித்துக்கொள்ள முயற்சிக்கவில்லை. நிந்தைக்கு அஞ்சாத நெஞ்சுரத்தோடு இயேசு இருந்தார்.

அவமானங்களும் நிந்தைகளும் சில நேரங்களில் பிறரால் ஏற்படலாம். சில நேரங்களில், நம்முடைய பிழைகளாலும், பலவீனங்களாலும் கூட ஏற்படலாம். ஆனால் அவற்றிற்காக, நாம் மேற்கொள்ள நினைக்கும், அல்லது ஏற்கனவே மேற்கொண்டிருக்கும் பணியைக் கைவிடாமல் இருப்பதே நல்ல தலைவரின் பண்பு. நிந்தைக்கு அஞ்சாதவனே நல்லதலைவன். பொந்துக்குள் ஒளிபவன் அல்ல.

**அருள்வாக்கு: “மன உறுதியோடு இருந்து உங்கள் வாழ்வைக் காத்துக் கொள்ளுங்கள்” (லூக். 21:19).**

**செபம்**

'யாரைத் தேடுகிறீர்கள்' என எதிரிகள் நடுங்க, எதிர்த்து நின்றவரே, உம்மைப்போல நிந்தைக்கு அஞ்சாதத் தலைமைப் பண்பை எங்களுக்குத் தாரும்.

◆

✦ **பதினொன்றாம் நிலை**

# துன்புறத் தயங்காத் தலைமை

"ஏதாவது முத்திரைக் குத்தி ஒதுக்கி வைத்தால் என்ன செய்வது? அதிகாரத்தில் இருப்போர் மிரட்டி உருட்டினால் எப்படி மீள்வது? பெரும்பான்மை அவர்கள் பக்கம் இருக்க, உண்மைக்காக சிறுபான்மை பக்கம் நின்று வாங்கிக் கட்டவா முடியும்?" என வரக்கூடிய ஆபத்துக்களையும், சந்திக்க வேண்டியிருக்கும் துன்பங்களையும் கண்டு பதுங்குவது ஒரு தகுதியான தலைவனுக்கு அழகல்ல.

நம் தேசத்தின் விடுதலைக்காகப் போராடிய பலநூறு தலைவர்கள் தொடங்கி, தென் ஆப்ரிக்காவின் நெல்சன் மண்டேலா வரை, தலைவர்கள் சிறைவாசத்திற்கும் வனவாசத்துக்கும் அஞ்சியதில்லை; துன்புறத் தயங்கியதில்லை. எனவேதான், இன்று அவர்கள் தலைவர்கள் வரிசையில் கம்பீரமாய் தோற்றமளிக்கிறார்கள்.

கூரிய ஆணிகள், ஓங்கி உயரும் சுத்தியல், எனக் கொலைக் கருவிகளோடு தம்மை வீரர்கள் சூழ்ந்திருந்த போதும் இயேசு துணிவை இழந்ததாகத் தெரியவில்லை. சிலுவையில் அறையப்பட தம் கைகளை விரித்துக் கொடுக்கிறார். எத்துணை துன்பங்கள் வந்தாலும், அவற்றைத் தாங்கிக் கொள்ளத் தயார் எனத் தம் மார்பையும் அகலவே விரித்து வைத்திருந்தார் இயேசு. பஞ்சு மெத்தையில் தூங்க நினைப்பவன் தலைவன் அல்ல; தூக்கு மேடையையும் பஞ்சு மெத்தையாகக் கருதுபவனே தலைவன்.

**அருள்வாக்கு: "ஆன்மாவைக் கொல்ல இயலாமல், உடலை மட்டும் கொல்பவருக்கு அஞ்ச வேண்டாம்"**

**(மத். 10:28)**

## செபம்

"வாருங்கள் எருசலேமுக்குப் போவோம்" எனத் துன்பத்தை எதிர்கொள்ளத் துணிந்து சென்ற இயேசுவே, உம்மைப்போல் துன்புறத் தயங்காத் தலைமைப் பண்பினை எங்களுக்குத் தாரும்.

◆

## ✦ பன்னிரண்டாம் நிலை

# தியாகத்துக்கு அஞ்சாத் தலைமை

"உடல் மண்ணுக்கு, உயிர் தமிழுக்கு" என வீரவசனம் பேசினாலும் "எங்கள் தாய் நாட்டை உயிருக்கும் மேலாக நேசிக்கிறோம்" என உறுதிமொழி ஏற்றாலும், நம்மில் எத்தனை பேர் உண்மையான தியாகத்துக்குத் தயாராய் இருக்கிறோம்? உயிரைக் கொடுப்பது இருக்கட்டும், நம்மிடம் இருக்கும் சில வசதிகளையும், சவுகரியங்களையுமாவது இழக்கத் தயாராயிருக்கிறோமா? ஆனால், தங்கள் உயிரையும் கொடுக்கத் துணிந்த பல தியாகச் செம்மல்கள் தான் சிறந்த தலைவர்களாகவும், உன்னத மனிதர்களாகவும் வரலாற்றில் உயர்ந்து நிற்கின்றனர்.

இவர்களில் எல்லாம் தலைசிறந்தவராக உயர்ந்து விளங்குபவர்தான் சிலுவையில் தொங்கும் மெசியா, நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து. மனுக்குலம் முழுவதும் மீட்புப் பெற வேண்டும், மானுடம் முழுவதும் மாண்புற வேண்டும், மரணமே தமக்கு நேர்ந்தாலும் மனிதர்கள் யாவரும் வாழ்ந்திட வேண்டும் எனத் தம் உயிரைக் கொடுத்தவர்தான் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து. தமது கடைசித்துளி இரத்தத்தையும், தண்ணீரையும், தமது இறுதி மூச்சினையும்

தந்தையின் சித்தத்திற்காகவும், நமது மீட்புக்காகவும் தியாகம் செய்த உத்தமத்தலைவன்.

எதை இழக்க நேரிட்டாலும், தாங்கள் கொண்ட கொள்கைக்காகவும், போராடிய மக்களுக்காகவும், கடைசி மூச்சு உள்ளவரை உழைத்து, தங்கள் உயிரையும் தாரை வார்க்கத் துணிந்த நல்லவர்கள் பலரால்தான் நாம் விடுதலைக் காற்றை சுவாசிக்க முடிகிறது, மாண்புடன் மனிதராய் வாழமுடிகிறது. தியாக வேள்வியில் பலியாகத் தெரிந்தவர்கள் தான் தலைவர்கள். சாகவும் துணிபவனே தலைவன்; சவுகரியம் தேடுபவன் அல்ல.

**அருள்வாக்கு: "நல்ல ஆயன் நானே! நல்ல ஆயர் ஆடுகளுக்காகத் தம் உயிரைக் கொடுப்பார்"**

**(யோவா. 10:11)**

**செபம்**

நாங்கள் வாழ்வைப் பெறும் பொருட்டும், நிறைவாகப் பெறும் பொருட்டும் உயிர் துறந்த இயேசுவே, உம்மைப் போல் தியாகத்துக்கு அஞ்சாத தலைமைப் பண்புடன் வாழ எங்களுக்கு அருள்தாரும்.

◆

✦ **பதின்மூன்றாம் நிலை**

# துவண்டு போகாத தலைமை

"எனக்கு என்ன ஆனாலும் பரவாயில்லை. ஆனால், என்னைச் சார்ந்தவர்களுக்கு எதுவும் ஆகிவிடக்கூடாது" என்று எண்ணி ஒதுங்குவதே நம்மில் பலரது இயல்பு. விதிவிலக்காக யாராவது துணிவுடன் இருந்து, நெருக்கமான யாரையாவது இழக்க நேரிட்டால், அவர்களை "பைத்தியக்காரர்கள்" என்றும் "பிழைக்கத் தெரியாதவர்கள்" என்றும் முத்திரை குத்தி விடுகிறோம். "அநியாயமாகத் தன் பிடிவாதத்திற்குத் தன்

பிள்ளையை பறிகொடுத்துவிட்டானே'' என்று பழிபோடுவோரும் இவ்வுலகில் அதிகம்.

இந்தத் தலத்தில் இயேசுவையும் மரியாவையும் பார்க்கின்றபோது, நமக்குள் எழுகின்ற இயற்கையான கேள்வி - அப்பழுக்கற்ற இயேசுவுக்கும், மாசற்ற மரியாவுக்கும் ஏன் இந்த முடிவு? விடைகாண முடியா கேள்வி இதுவென்றாலும் அதற்கான காரணம் அவர்களது வாழ்விலே வெளிப்பட்டது. எத்தனை சோதனைகள் வந்தாலும், எத்தனை எதிர்ப்புகள் இருந்தாலும், எத்தனை வீழ்ச்சிகளை சந்தித்தாலும் துவண்டு போகாத உள்ளத்தை இருவருமே பெற்றிருந்தனர்.

செத்துக் கொண்டிருந்த இயேசு செய்த கடைசிக் காரியங்களில் ஒன்று "இதோ உன் தாய், இதோ உன் மகன்'' என மரியாவையும் யோவானையும் ஒருவருக்கொருவர் உறவாய்க் கொடுத்தது. தமது மண்ணக வாழ்வு முற்றுப்பெற்றாலும் தாம் தொடங்கி வைத்த மீட்புப்பணியும், நற்செய்திப் பணியும் தொடர வேண்டும் என உறுதி கொண்டிருந்ததால் தான் இயேசு அவ்வாறு செய்தார். மரியாவும் அப்பணியைத் துணிவோடு ஏற்று நிறைவாகவே செய்தார். உடல் துவண்டு போனாலும், உறவினையே இழக்க நேரிட்டாலும், மனம் துவண்டு போகாமல் பணி தொடர வேண்டும் என விரும்புபவனே நல்ல தலைவன். துவண்டு போகிறவன் அல்ல, புதுத்தெம்புடன் எழும்புபவனே நல்ல தலைவன்.

**அருள்வாக்கு: "இதோ, உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்" (மத். 28:20)**

## செபம்

"துணிவோடிருங்கள், அஞ்சவேண்டாம்'' என்று பலமுறை உம் சீடர்களுக்கு திடமூட்டிய இயேசுவே, உம்மைப்போல, துவண்டு போகாத தலைமைப் பண்புடன் வாழ எங்களுக்கு அருள் தாரும்.

◆

# நம்பிக்கையூட்டும் தலைமை

சரித்திரம் படைக்கப் புறப்பட்டு சருகாய் விழுந்தவர்கள் பலரை இந்த உலகம் பார்த்திருக்கிறது. அதற்குக் காரணம் வாழ்க்கையின் ஏதோ ஒரு தருணத்தில் அவர்கள் நம்பிக்கை இழந்ததுதான். "இதற்கு மேல் முடியாது" என்று யாரோ ஒருவர் விட்டுச் சென்றதை, வேறொருவர் தொடர்ந்து வெற்றி கண்டதையும் சரித்திரம் பதிவு செய்திருக்கிறது. வெற்றியடைபவர்களுக்கும், வெற்றியைத் தவற விடுபவர்களுக்கும் இடையே இருக்கும் வித்தியாசம் அவர்களது நம்பிக்கையின் அளவுதான்.

தலைவர்கள் தாமும் நம்பிக்கை இழப்பதில்லை; தம்மை நம்பி வருவோரின் நம்பிக்கையையும் தளர விடுவதில்லை. தாம் ஒருநாள் சிலுவையில் மரிக்க வேண்டும், அதன்பின் அடக்கம் செய்யப்பட வேண்டும் என்பதை நன்றாகவே அறிந்திருந்த இயேசு, அந்த உண்மையைத் தம் சீடர்களுக்கு ஒரு முறையல்ல, மூன்று முறை முன்னறிவித்திருந்தார். ஆனால் மரித்த மூன்றாம் நாள் உயிர்த்தெழுவார் என்பதையும் உறுதிபடவே சொல்லி இருந்தார். நம்பிக்கையூட்டும் நல்ல தலைவராகவே இயேசு இருந்திருக்கிறார்.

"இக்கோவிலை இடித்து விடுங்கள் நான் மூன்று நாளில் இதைக் கட்டி எழுப்புவேன்" என்று முன்பொருநாள் அவர் கூறியதை, அவரது சீடர்கள் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. ஆனால் அவரது பகைவர்கள் புரிந்துகொண்டு பயந்து நடுங்கினர். எனவேதான் கல்லறைக்குக் காவலாளிகளை ஏற்பாடு செய்தனர். செத்தவன் கல்லறைக்குக் காவல் வைத்தது சரித்திரத்தில் அந்த ஒரே முறைதான். செத்த பின்னும் சிம்ம சொப்பனமாய் திகழ்பவனே சிறந்த தலைவன். மறக்கப்படுபவன் தலைவன் அல்ல; மறைந்த பின்னும் வணங்கப்படுகிறவனே தலைவன்.

**அருள்வாக்கு: "உலகில் உங்களுக்குத் துன்பம் உண்டு. எனினும் துணிவுடன் இருங்கள். நான் உலகின்மீது வெற்றி கொண்டு விட்டேன்" (யோவா. 16:33)**

## செபம்

இரவல் கல்லறையில் இடப்பட்டாலும் இறவாப் புகழோடு வாழ்பவரே, உம்மைப் போல் நம்பிக்கையூட்டும் தலைமைப் பண்புடன் வாழ எங்களுக்கு அருள் தாரும்.

◆

## முடிவுரை

அரசருக்கெல்லாம் அரசரும், தலைவருக்கெல்லாம் தலைவருமான இயேசுவின் வாழ்வு முழுவதுமே. காணக் கிடக்கிறத் தலைமைப் பண்புகள், அவரது பாடுகளின் பாதையிலும் பரிமளிக்கத் தவறவில்லை என்பதை இந்தச் சிலுவைப் பாதைச் சிந்தனைகள் நமக்கு உணர்த்தியிருக்கும். இந்தக் கிறிஸ்துவைப் பின்பற்றுகிற ஒவ்வொருவரும் தலைமைத்துவத்துக்கு அழைக்கப்பட்டவர் தான். நமது திருமுழுக்கின்போது அருளப்பட்ட அர்ச்சிக்கும் பணி, அறிவிக்கும் பணி, ஆளுமைப்பணி ஆகிய முப்பெரும் பணிகளில் ஆளுமைப்பணி சுட்டுவது தலைமைப் பணி யினைத்தான். "நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமரபினர், அரச குருக்களின் கூட்டத்தினர், தூய மக்களினத்தவர், அவரது உரிமைச் சொத்தான மக்கள் (1 பேதுரு. 2:9) என்று தூய பேதுரு கூறுகிறார். இந்த நாட்டில், சமூகத்தில், பங்குத் தளத்தில், குறைந்த பட்சம் நம் குடும்பத்தில் என ஏதோ ஒரு விதத்தில் நமக்கும் தலைமைத்துவத்துக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதற்கான பாடங்களை இந்தப் பாடுகளின் பாதையில் பயின்றவர்களாய் தலைமையேற்கப் புறப்படுவோம். நல்ல தலைவர்களாய் சிறந்திடுவோம்.

◆